**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 295/2017**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 13.11.2025 | | |
| பெயர்: | ராஜேந்திரன் (PW– 1 Cross ) | தகப்பனார் பெயர்: | சம்பந்தம் |
| கிராமம்: | வழுதலைக்குடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 65/2025 |

**3–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 13.11.2025**

**(ஆரம்பித்த நேரம்–12.27 )**

எனது தகப்பனார் சம்பந்தம் நல்ல உடல் நிலையுடன் ஆரோக்கியமாக இருந்துதான் காலமானார் என்றால் இல்லை. அவர் நோய்வாய்ப்பட்டு இறந்துப்போனார். படுத்தபடுக்கையாக இருந்தப்படி இறந்துபோனாரா என்றால் இல்லை நடமாடி கொண்டுதான் இருந்தார். அவர் இறந்தபிறகு அவருக்கு இறுதிசடங்குகள் எனது அண்ணன் சாமிநாதன், 3–ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி மற்றும் நான் மூவரும் சேர்ந்து செய்தோம் என்றால் இல்லை நான் மட்டும்தான் இறுதிசடங்குகள் செய்தேன்.

2. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது தகப்பனாரின் உத்திரகிரியை பத்திரிக்கை என்றால் சரிதான். அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஆவணத்தில் இப்படிக்கு என்ற இடத்தில் சாமிநாதன், கிருஷ்ணமூர்த்தி, ராஜேந்திரன் என்று உள்ளது என்றால் முறைக்காக போடசொன்னார்கள் அதனால்தான் பெயர் சேர்க்கப்பட்டது. எனது தகப்பனாருக்கு இறுதிச்சடங்குகள் மற்றும் உத்திரகிரியை நான், கிருஷ்ணமூர்த்தி, ராஜேந்திரன் ஆகிய 3 பேரும் சேர்ந்து செய்துவிட்டு தற்போது

வழக்கிற்காக நான் மட்டும்தான் செய்தேன் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

3. எனது தகப்பனார் இறக்கும் காலத்தில் என்னுடன் தான் இருந்தார். வா.சா.ஆ 17 ஆவணம் என்பது எனது தகப்பனார் என்னுடன் இருந்த காலத்தில் ஏற்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 17 ஆவணம் என்பது நில உச்ச வரம்பு சட்டத்தின் கீழாக நிலம் ஒதுக்கப்பட்டதற்கு தவணை தொகை கட்டிய ரசீதுகள் என்றால் சரிதான். இறுதியாக எப்போது தவணை தொகை செலுத்தப்பட்டது என்றால் கடந்த 2001–ம் வருடம் இருக்கும்.2001 ற்கு பிறகும் தவணை தொகை பாக்கி இருந்தது என்றால் இருந்திருக்கலாம் எனக்கு ஞாபகமில்லை. இறுதியாக செலுத்தப்பட்ட 06.03.2001–ம் தேதியிட்ட தவணை ரசீதில் கணக்கு முடிக்கப்பட்டு விட்டதாக காணப்படவில்லை என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ 17 ஆவணம் எனது வீட்டில் இருந்த காரணத்தினால் தாக்கல் செய்துள்ளேன். இதன்மூலம் எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தவணை தொகையை யார் வேண்டுமானாலும் கட்டலாம், அதுபோலதான் நான் பணம் செலுத்தியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 17 ஆவணத்தில் இடதுபக்கம் கீழே முத்துவேல் என்ற பெயர் உள்ளது என்றால் சரிதான். அவர் கிராம உதவியாளர் . நான் தவணை செலுத்திய காரணத்தினால் உரிமையும், அனுபவமும் கேட்க இயலாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கை 3–ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.39)**

**2, 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**